# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 204 ஆங்கீரச ஆனி 04 ( 18 . 06 1992 ) வியாழன்


## மண்ணெண்ணெய் திடீர் மறைவு

குடாநாட்டில் நேற்று மாலை சிலர் வதந்திகளைப் பரப்பியதால் மண்ணெண்ணெய் திடீரென மறைந்தது. பல இடங்களில் மக்கள் கியூவில் நின்று மண்ணெண்ணெயை வாங்கியதைக் காண முடிந்தது சில வியாபாரிகள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி விலை அதிகரித்து விற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது இதேவேளை போதியளவு மண்ணெண்ணெய் குடாநாட்டில் இருப்பதாக மண்ணெண்ணெய் மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர் (47-15-07-06-22-43)

# மண்ணெண்ணெய்தட்டுப்பாட்டிற்கு காரணம் எதுவும் இல்லை

### அவ்ரோ நோட்டம்

நேற்று பகல் 11மணியளவில் தென்மராட்சியை அண்டிய பகுதிகளை அவ்ரோ விமானம் ஒன்று பலதடவை சுற்றி வட்டமிட்டுச் சென்றது

04 ஆம் பக்கம் பார்க்க

## போதியளவு கையிருப்பில் உள்ளது

யாழ் குடாநாட்டில் மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு இல்லை எனவும், தட்டுப்பாட்டுக்குக் காரணம் எதுவும், இல்லை எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறு தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க அதிபர் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

இதனையறிந்து இரண்டொரு தினங்களில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுச் சிலர் வேண்டுமென்றே மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாட்டையும் மக்கள் மத்தியில் பதற்றத்தையும் ஏற்படுத்திக்கொள்ளை லாபம் அடிக்கும் நோக்கில் செயற்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## தெரிவுக்குழு சிபார்சுகளை அப்படியே அமுல் செய்யுமாம்

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேசமயம் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த தமிழ்க் கட்சிகள் முன்வைத்த இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பிரேரணைகளை நேற்று ஜனாதிபதி அமைச்சரவையின் கவனத்திற்கு சமர்ப்பித்ததாகவும் அமைச்சர்

... 04ஆம் பக்கம் பார்க்க

## பலாலி இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாம்

பலாலி இராணுவ முகாமைச்சூழவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்ரேஷன் சண்டமாருதம் இராணுவ நடவடிக்கை முடிவடைந்துவிட்டதாக இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தெல்லிப்பழை அருகே கண்ணிவெடி; ஜீப் சிதறியது

பலாலி இராணுவ முகாமிற்கும் தெல்லிப்பழை பகுதிக்கும் இடையில் கண்ணிவெடியில் இராணுவ ஜீப் ஒன்று சிக்கிச்சிதறியதில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானார் மூன்று சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இத்தகவலை வெளியிட்ட இராணுவப்பேச்சாளர் கேர்ணல் சரத்முனசிங்க நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக கூறினார்.

எனினும் கண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்ற சரியான இடத்தை அவர் கூறவில்லை

**★ முரசொலி செய்தியால் பலன்**

## வலி வடக்கு அகதிகளுக்கு தொடர்ந்தும் நிவாரணம்

வலிகாமம் வடக்கு பகுதிகளில் இருந்து கடந்த மாதம் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு தொடர்ந்தும் இலவச உலர் உணவு கிடைக்கும் என யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அரசாங்க அதிபர் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திஸ்ஸ டி சில்வாவுக்கு நேற்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் தந்தி அனுப்பியுள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் இம்மாதம் 11ஆம்திகதி வரை வலிவடக்கு வடமராட்சி பகுதிகளில் இருந்து பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும்வரை தொடர்ந்தும் நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் அரசாங்க அதிபர் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

வலி வடக்குப்பகுதி அகதிகளுக்கு நிவாரணம் தொடருமா என்ற தலைப்பில் முரசொலி நேற்று செய்தி வெளியிட்டது தெரிந்ததே.

இதனையடுத்து அரசாங்க அதிபர் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்தை முடிக்க கால அட்டவணை

வடக்கு கிழக்குப் பகுதியில் பல வருட காலமாக தொடரும் சிவில் யுத்தத்தை முடிவுறச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதற்கென நீர்க்கமான கால அட்டவணை (Time frame) அரசினால் தயாரிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

**● இந்திய வானொலியின்**

## இணைப்புக்கு எதிர்ப்பு எனும் செய்தி ஊர்ஜிதமாகவில்லை

ஜனாதிபதியை தமிழ்க்கட்சியினர் சந்தித்தபோது அவர்கள் சமர்ப்பித்த 4 அம்சத் திட்டங்களையும் பரிசீலிக்க பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் அவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதனிடையேவடக்குகிழக்கு இணைப்பை ஜனாதிபதி ஏற்கமறுத்ததாக இந்தியவானொலி வெளியிட்ட செய்தியை வேறு எந்த செய்தி நிறுவனங்களும் இதுவரை ஊர்ஜிதம் செய்யவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## விழிசிட்டியில் இருந்து இராணுவம் பின்வாங்கியது

விழிசிட்டிப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் தமது நிலைகளை விட்டு ஓரளவு பின்வாங்கி விட்டதாகத் தெரியவருகிறது.

நேற்று முன் தினம் விழிசிட்டி பலநோர். கூட்டங்கள் வரை பொதுமக்கள் சென்று வந்தனர்.

அங்கு சென்று பார்த்தபோது கோழிகள் உரித்த அடையாளங்களும் இரத்தமும் காணப்பட்டதாகவும் வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டிருந்ததாகவும் சில வீடுகளிலிருந்த பொருள்கள் வீதிகளில் வீசப்பட்டிருந்ததாகவும் பிக்கட்டுகளும் காணப்பட்டதாகவும் வீடு பார்க்கச் சென்ற பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர். (22)

## பிரான்ஸ் செய்தியாளரை இராணுவம் தாக்கியது

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்துகொண்டிருந்த பிரான்ஸ் நாட்டு பத்திரிகையாளர் ஒருவர் தாண்டிக்குளம் இராணுவத் தடைமுகாம் பகுதியில் கியூவில் நின்ற தமிழ் பயணிகளை படம் எடுக்க முற்பட்டவேளை அங்கு நின்ற இராணுவத்தால் தாக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

பின்னர் இவர் ஒருபிரான்ஸ் நாட்டுப் பத்திரிகையாளர் என ஊர்ஜிதப்படுத்தியதைத் தொடர்ந்து இராணுவத்தினர் இவரை வடபகுதிக்கு செல்ல அனுமதி வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடில்லை

அரிசி, மா, சீனி மற்றும் உணவுப் பொருள்களுக்கு குடாநாட்டில் எதுவித தட்டுப்பாடும் இல்லை என செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் மேலதிக கப்பல் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்

இதேவேளை அமேசன், மெரினா ஆகிய சிறிய கப்பல்கள் காங்கேசன்துறைக்கு உணவுப் பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (47

★ ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் மீதான

# குண்டு வீச்சுக் குறித்து ஜனாதிபதியிடம் அமைச்சர் புகார்

வரலாற்றுப் புகழ் மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயமும், அதனுடன் இணைந்திருந்த அநாதைச் சிறுவர் இல்லம், அகதி முகாம் என்பனவும் ஸ்ரீலங்கா விமானப் படையினரால் குண்டு வீசித் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி இந்து சமய விவகார, கலாசார இராஜாங்க அமைச்சர் பீ பீ தேவராஜ் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் புகார் செய்துள்ளார்.

வடபகுதியிலுள்ள பல சமய அமைப்புக்கள் இந்து சமய இராஜாங்க அமைச்சரிடம் இத் தாக்குதல் குறித்துத் தெரிவித்த புகார்களை யடுத்தே இவ் விடயத்தை அமைச்சர், ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

மேற்படி ஆலயம் மீதான தாக்குதலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இந்து, இறிஸ்தவ அமைப்புகள் ஒருங்கிணைந்து மாபெரும் கண்டனப் பேரணியொன்றை நடத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வறுமை நிவாரண வேலைகளுக்கு லிகிதர்கள் நியமனம்

அமைதி எழுதுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சமூக சேவைப் பிரிவில் வறுமை நிவாரண ஆணையாளரின் அனுமதியின் பேரில் நியமனம் பெற்ற 11 பேரில் 9 பேர் யாழ். குடாநாட்டின் பல்வேறு பிரதேச செயலகங்களிலும் நேற்று முதல் கடமையாற்றப் பணிக்கப் பட்டுள்ளனர்.

மருதங்கேணி, சங்கானை தீவகம் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகங்களுக்கு ஒருவர் வீதம் இவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## உளவியல் பாதிப்புற்றோருக்கு வைத்திய ஆலோசனை

வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் உளவியல் தொடர்பான பாதிப்புக்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று யாழ் றெட்பானா நிறுவனத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் நடாத்தப்பட்டது.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

உளவியல் ரீதியான தாக்கங்களை உடையோர் தெல்லிப்பளையிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கும் சாந்திய உளவள நிலையத்தில் வைத்திய ஆலோசனையை பெற்று இணையத்தினால் நடவடிக்கை எடுப்பதெனவும் அகதிமுகாம்களில் உள்ள அனாதைப் பிள்ளைகளை இயன்றளவரை குடும்பங்களின் பராமரிப்பில் விடுவதெனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

(15)

## ரயில் சேவை

பதுளைக்கான ரயில் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் வந்துவளையில் ஏற்பட்ட மண் சரிவினால் புதையுண்ட ரயில் என்ஜின் மீட்கப்பட்டதையடுத்து ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## அபிவிருத்தி

வடக்கில் நிலைமை சீரானதும் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் படுமென துறைமுகங்கள் இராஜாங்க அமைச்சர் பாரூக் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்

## தோல் பதனிடும் தொழிலாளர்

மேற்படி எமது பணிமனையில் தோல் பதனிடும் பயிற்சி நெறி இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

பயிற்சிநெறி பயில விரும்பும் ஆற்றலும் அனுபவமும் தகுதியும் உள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 23-06-92க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும் நேர்முகப் பரீட்சை 24-06-92 காலை 10.00 மணிக்கு நடைபெறும், தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
16-06-92

ச சிவானந்தராசா
கௌரவசெயலாளர்

06042

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்

## தோல் பதனிடும் உத்தியோகத்தர்

எமது பணிமனையில் தோல் பதனிடும் உற்பத்தியைத் திறம்பட நடைமுறைப்படுத்தக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பட்டதாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் (N.D.T) அல்லது அதற்கு சமமான கல்வித் தராதரம், தலைமை, அனுபவம், ஆற்றல், ஆர்வம் உள்ளோரிடமிருந்தும், உள்ளூரிலேயே கடமை புரியக் கூடியவர்கள் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் யாவும் 25-06-92க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 27-06-92 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
16-06-92

ச சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

06043

# பற்றீஷன்

## தொழிற்பயிற்சி நிறுவனம்

## PATRICIAN INSTITUTES

பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன,

1. TOEFL
   ( Test Of English as a Foreign Language )
   ★ Duration: 3 Months ★ Week Days and Week End Classes
   ★ Commencing: 22-06—1992
2. Spoken English
   ★ Week Days and Week-End Classes
   ★ Duration: 3 Months
   ★ Commencing: 24-06—1992
3. Civil Draughtsmanship Course
   ★ Commencing: 24—06—1992 ★ Duration: 3 Months
4. Quantity Surveying
   (City and Guilds of London Examination)
   ★ Commencing: 24—06—1992
5. Computer Processing Courses
   (i) Computer Programming in BASIC Language and Disc Operating System MS-DOS)
   (ii) Word Processing and MS-DOS (Word Star - 4000)
   ★ Week Day Classes ★ Commencing; 24—06—1992
   (iii) d BASE III PLUS and MS-DOS
   (iv) LOTUS 1-2-3 and MS-DOS
   ★ Week-End Classes ★ Commencing. 27—06—1992

THEORY AND PRACTICALS

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஷன தொழிற்பயிற்சி
நிறுவனம,
59, சென் பற்றிக்ஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

Registrar
Patrician Institute of
Higher Studies,
59, St. Patrick's Road,
Jaffna.

06040

# யாழ்ப்பாண மாநகரசபை

## டிராக்டர் கொள்வனவுக்கான கேள்வி அறிவித்தல்

பாவனையிலுள்ள பெட்டியுடன் கூடிய டிராக்டரைக் கொள்வனவு செய்வதற்கான அரசகு முத்திரையிடப்பட்ட விற்பனை விலை கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா. 500/- உம், மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/=உம் செலுத்தப்படுவதன் பேரில் 0 - 07 - 92 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே விற்பனை விலைகள் குறிப்பிடப்பட்டு 03-07-92ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் நேரடியாகச் சேர்க்கப்படுதல் வேண்டும். கேள்விகள் அதேதினம் பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விவரங்களை மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம் 16-06-1992

06041

# ஆசிரியர் சம்பளத் திட்டத்தை மீளாய்வுக்குழு ஏற்றது

ஆசிரியர்களின் சம்பளத் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென ஆசிரியர் சங்கங்கள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சம்பள மீளாய்வுக் குழு ஏற்றுள்ளது.

இதன்படி ஆசிரியர்களின் அதிகுறைந்த சம்பளம் 2750 ரூபாவாகவும் அதி உயர்ந்த சம்பளம் 9 ஆயிரம் ரூபாவாகவும் அமையும்.

இந்தச் சம்பளத் திட்டம் பற்றிய முழுமையான விபரங்கள் ஏற்கனவே முரசொலியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# உரும்பராயில் வள்ளுவர் விழா; மூன்று தினங்கள் இடம்பெறும்

உரும்பராயில் வள்ளுவர் விழாவை வெகு சிறப்பாக கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

உரும்பராய்ச் சோதிமணி அதிபர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடத்துவதெனவும் விழாவினை 3 நாட்கள் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப் பட்டது. 35

# மாலுமி அனுமதிப்பத்திரம்; விசாரணைதேவை என்கிறார் தினேஷ்

தமிழ்த்தீவிரவாத இயக்கத்தவர்களுக்கு கப்பலைச் செலுத்துவதற்கான மாலுமி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை குறித்து அரசு விசாரணை செய்யவேண்டுமென தினேஷ்குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கோரியுள்ளார்.

சில கப்பல் நிறுவனங்கள் இவர்களுக்கு மாலுமி அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாகவும் தினேஷ் குணவர்த்தனா அங்கு தெரிவித்தார்.

# காலி வீதி பஸ் சேவை நேற்றும் தொடர்ந்து ஸ்தம்பிதம்

மொறட்டுவை, பாணந்துறைப் பகுதிகளுக்கான மினிபஸ் சேவைகள் நேற்றும் தொடர்ந்து ஸ்தம்பிதமடைந்திருந்தன.

மினிபஸ்களின் மீது பொலிஸார் கடந்த சில தினங்களாக இடையிடையில் திடீர்ப் பரிசோதனை மேற்கொண்டதைக் கண்டித்தே இந்த மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் பஸ்களின் ஊழியர்கள் கடமைக்குச் செல்லாது பகிஷ்கரித்து வருகின்றனர்.

இதனால் கொழும்பிலிருந்து காலிவீதியில் பஸ் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

# டாங்கி உற்பத்தியில் ரஷ்யா - இந்தியா கூட்டுமுயற்சி

மூன்றாவது உலக நாடுகளுக்காக விமானங்களையும், டாங்கிகளையும் உற்பத்தி செய்யவும், ஏற்றுமதி செய்யவும் இந்தியாவுடன் கூட்டுத் தொழில் முயற்சிகளை நிறுவ ரஷ்யா முன்வந்திருப்பதாக ரஷ்ய தூதரகப் பேச்சாளர் ஒருவர் புதுடில்லியில் தெரிவித்தார்.

அதிகவெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிக்க ஆயுத விற்பனை ஒரு முக்கிய வழியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கோட்டை ரயில் நிலையத்தில் சாதாரண உடையில் பொலிஸார்

கோட்டை ரயில் நிலையத்தில் சாதாரண உடையணிந்த பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இம் மாதம் 6 ஆம் திகதி கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிஸார் எனக்கூறி பிரயாணி ஒருவரிடமிருந்து 90 000 ரூபா கொள்ளையிடப்பட்டதையடுத்தே நகர பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏ. என். செனிவரட்னாவின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை மெடுக்கப்பட்டுள்ளது.

தினமும் மாலை 6 மணிமுதல் இரவு 11 30 மணி வரை சாதாரண உடையணிந்தபொலிஸார் கோட்டை புகையிரத நிலையத்தில் கடமையிலிருப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இரகசியப் பொலிஸார் எனக்கூறி யாராவது பிரயாணிகளைத் தன்புறத்தினால் அதனை உடனடியாக புகையிரத நிலைய அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# புற்றுநோய்த் தாக்கம் தமிழகத்தில் அதிகரிப்பு

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ் நாட்டிலேயே அதிகம் பேர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சென்ற ஆண்டின் வைத்திய அறிக்கையின் படி சுமார் 10 000 பேர் அங்கு புற்றுநோய் காரணமாக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர் எனத்தெரிவிக்கப்படுகிறது 15

# தென்னாபிரிக்க கலவரத்தில் 32 பேர் பலி!

தென்னாபிரிக்காவில் புதிதாக மூண்டகலவரத்தில் 32 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதற்ற நிலை நீடிப்பதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

# வட - கிழக்கு இணைப்பு நிராகரிப்பு- பலமுள்ள ஆட்சி அலகு நிராகரிப்பு

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வின் ஒரு பகுதியாக வடக்கு- கிழக்கு மாகாணங்களின் இணைப்பை ஏற்க முடியாது. 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் மாற்றம் எதுவுமில்லை என ஜனாதிபதி பிரேமதாஸா தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தம்மைச் சந்தித்த தமிழ் குழுக்களிடம் தெரிவித்துள்ளதாக இந்தியவானொலி நேற்று முன்தினம் அறிவித்தது.

கொழும்புத் தமிழ்க் குழுக்களின் நான்கு கோரிக்கைகளில் முதலாவது கோரிக்கையே வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்புத்தான். ஜனாதிபதியும் அவரது அரசும், கட்சியும் தமிழ் மக்களின் ஏகோபித்த இணைப்புக் கோரிக்கையை நிராகரித்து விட்டது இப்பொழுது தெளிவாகிறது.

இந்தக் கோரிக்கையை ஏற்க முடியாததற்கு ஜனாதிபதி கூறியிருக்கும் காரணம் ஒரு பக்கத்தில் விசித்திரமானதாகவும் இன்னுமொருபக்கத்தில் சிங்களப் பேரினவாதத்தின் விட்டுக் கொடுக்காத தன்மையை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தான் தீர்வு என்றால், அதிலிருந்து அரசு மாறாது என்றால், சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பதெல்லாம் ஏன்? கலந்தாலோசனை, விட்டுக் கொடுப்பு, கருத்தொற்றுமை என்பவைவெல்லாம் ஏன்?

தேர்தல் விஞ்ஞாபனம் என்ன தேவ வாக்கா? அது மாற்றப்படக் கூடாததா அல்லது மாற்றப்பட முடியாததா? என்ற கேள்விகள் நியாயமாக எழுவது இயல்பே

இந்த தேர்தல் விஞ்ஞாபனத் தயாரிப்பின் வழிகாட்டியும் சூத்திரதாரியும் ஜனாதிபதி பிரேமதாஸ தான் என்பதை இவ்வருட ஆரம்பத்தில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவே கூறியுள்ளார்.

கச்சேரி முறையில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பான பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா ஒற்றையாட்சி அமைப்பின் அதிகாரம் அரச பணிகளை உள்ளூராட்சி மன்றங்களின் மட்டத்துக்கு பரவலாக்கி, பகிர்ந்தளிப்பதன் மூலம் பேணப்படும் எனக் கூறியுள்ளார்.

மேலும் சரித்திரத்தின் இன்றைய நிலையில் இலங்கையின் பொதுத்துறை நிர்வாக அமைப்பில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் பற்றி ஜனாதிபதி பிரேமதாஸாவின் புத்திசாலித்தனமான வழிகாட்டலில் தயாரிக்கப்பட்ட ஐ.தே.க.தேர்தல் விஞ்ஞாபனத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவற்றிலிருந்து அதிகாரப் பகிர்வு அலகு உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் அமைய

**எஸ். ஜி. எம்.**

வேண்டுமென்பது அரசின் கொள்கை என்பது தெளிவாகிறது.

இதன் மூலம் தமிழீழத் தாயகக் கோட்பாட்டைச் சிதைத்து விடலாம் என்பதும் தந்திரமாக ஒற்றையாட்சி முறையை தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதும், பலம் பொருந்திய பிராந்திய ஆட்சி அலகு எதுவும் ஏற்படுவது தடுக்கப்படவேண்டும் என்பதுவுமே அரசின் கொள்கைகள் என்பது சந்தேகமின்றி புலனாகின்றன. இதுதான் சிங்கள இனவாதத்தின் கொள்கையும் கூட.

ஜனாதிபதி பிரேமதாஸாவே 'உள்ளூராட்சி மன்றங்களான' பிரதேச சபைகளை உருவாக்கியவர். பட்டினசபைகள், கிராம சபைகள் என்பவற்றை ஒழித்தே இவை உருவாக்கப்பட்டன.

பின்னர் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு என்ற பேரில் பிரதேசச் செயலகங்கள் உருவாக்கப்பட்டன. உதவி அரசாங்க அதிபர்களே பிரதேசச் செயலாளர்கள் ஆகவும் பிரதேச சபைச் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அமைச்சர் தொண்டமான் முன்வைத்த ஆலோசனைகளில் முஸ்லிம்களுக்கென ஓர் முஸ்லிம் பிரதேச சபைகளின் ஒன்றிணைப்பை ஏற்படுத்துவது தொடர்பான ஆலோசனை உள்ளடக்கப்பட்டிருந்தது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த பௌத்த பிக்குகளின் ஆலோசனையிலும் அதிகாரப் பகிர்வு அலகு பிரதேசசபை மட்டமாகவே குறிக்கப்பட்டிருந்தது.

இரண்டு வாரங்களுக்கு முந்திய 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தின் ஒரு பகுதி கீழ்வருமாறு அமைந்துள்ளது

'சமாதானத்தைத் தேடுவதுண்டு துண்டாகப் போவதிலும் பார்க்க ஏற்கெனவே உள்ள உள்ளூராட்சி மன்ற முறைக்கான மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் அமைப்பைத் தொடர்ந்து வைத்துக் கொண்டு சில எல்லை மீளாய்வுகளுடன் செயற் திறனுள்ள அதிகாரப் பகிர்வை மத்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்துவது புத்திசாலித்தனமானது என பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தக் கருத்துக்கள் எல்லாம் தற்செயல் நிகழ்வுகள் அல்ல திட்டமிட்ட செயற்பாடுகளே என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் மத்திய ஆட்சி அதிகாரங்களை வைத்துக்கொண்டு, அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் மாகாண சபைகளைக் கூட புறந்தள்ளிவிட்டு பிரதேச சபைகள் மூலம் ஆட்சி செய்வதே அரசின் நோக்கம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டிய நேரமும் இதுதான்.

★ கனடா டொரன்ரோ மாநகரில்

# தமிழரின் கடை சூறை; வாலிபரும் கடத்தப்பட்டார்!

கனடா டொரன்ரோவிலுள்ள தமிழர் ஒருவருடைய வீடியோக் கடை தாக்கப்பட்டு, அங்கிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வீடியோக் கடையை மூன்று கார்களில் இரவு நேரம் வந்த சுமார் பத்துப் பேரடங்கிய கோஷ்டியொன்றே தாக்கியதாகவும், இவர்களும் இலங்கையர்களே எனவும் கனடாப் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சமயம் அக்கடையில் கடமையிலிருந்த 19 வயது தமிழ் வாலிபர் ஒருவர் இக் கோஷ்டியால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் அவர் பின்னர் மீட்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

கடையின் ஜன்னல்கள், கதவுகளும் இவர்களால் உடைத்து நொருக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வெற்றிலை விலையில் நேற்று திடீர் வீழ்ச்சி

நேற்று முன்தினம் இரண்டு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த வெற்றிலை நேற்று 30 சதத்திற்கு திடீரென வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

கொழும்பு வெற்றிலையின் வருகையே இதற்குக் காரணமென வெற்றிலை வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை விழிசிட்டிப் பகுதியில் இருந்த வெற்றிலைத் தோட்டங்கள் யாவும் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் புல்டோசர் மூலம் இவற்றை அழித்துள்ளனர் எனவும் வெளிவிக்கப்படுகிறது. (22)

# பருப்பு, கருவாடு விலையை குறைப்பதற்கு ஆலோசனை

பருப்பு, வெங்காயம், கருவாடு ஆகியவற்றின் விலையை கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் விரைவில் குறைக்கவுள்ளதாகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

பாதுகாப்புவரி அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அத்தியாவசியப் பொருள்களின் விலையில் அதிகரிப்புச் செய்யப்படமாட்டாது எனவும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் அறிவித்துள்ளது.

மரங்களை அழிந்தால் மழை அருகும்

★ யோகி உரை

# எம் வளங்கள் பயன்படாது வீணாகிச் செல்கின்றன

நாம் யாருடைய காலிலும் விழுந்து அடிமையாக முடியாது. எமது மனோதிடத்தை உலகம் பார்த்து வியக்கிறது. எமது வளங்களை நாம் பயன்படுத்துவோம்.

எமது மண்ணில் உள்ள பொருள்களை நாம் பயன்படுத்தவேண்டும் மற்றவனுடைய பொருளை பயன்படுத்தும் மனோபாவத்தை நாம் கைவிடவேண்டும்

இவ்வாறு நேற்று பல்கலை கழகத்தில் கைலாசபதி அரங்கில் உணவுத்தேவையும் உற்பத்தி இலக்குகளும் எனும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரின் நூல் வெளியீட்டு வைபவத்தில் அறிமுக உரைநிகழ்த்தும் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைப்பிரிவுப் பொறுப்பாளர் திரு யோகரட்ணம்யோகி தெரிவித்தார்.

எமது வளங்களை நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை பயன்படுத்தாததால் எமது வளம் வீணாகிறது இதனால் அந்நியப் பொருள்களை சிறிலங்காவில் இருந்து பெறுகின்றோம் என்றும் அவர் கூறினார். (15)

# இளவாலை, மாதகல் அகதிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

மாதகல், இளவாலை பகுதியில் இருந்த இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து நிர்க்கதியாக அலையும் மக்களுக்கும் தொடர்ந்து இலவச உலர் உணவு விநியோகிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுக்கு தொடர்ந்து வழங்குவதற்கான அனுமதி புனர் வாழ்வு அமைச்சிடம் இருந்து கிடைக்கப் பெற்றதும் நிவாரணம் வழங்கப்படும் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47

# விவசாயிகளுடன் பேச ஜெயலலிதா இணக்கம்

நீர் இறைக்கும் விவசாயிகளுக்கு மின்கட்டணம் வசூலிப்பதான தமிழக அரசின் முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தவுள்ளதை அடுத்து இன்று விவசாயிகள் சங்கங்களுடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே தமிழக அரசின் விவசாயிகளிடமான மின் கட்டண வசூலிப்பை இந்திரா காங்கிரஸ் தமிழகப் பிரிவின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கண்டித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் 150 சிறுவர்கள் வயிற்றோட்டத்தினால் பாதிப்பு!

கொழும்பில் வயிற்றோட்டம் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயிற்றுப்போக்கு காரணமாக கொழும்பு லேடி றிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் இதுவரை 150 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டோர் உரிய மருந்து மருத்துவ சிகிச்சையை உடன் பெறாது விட்டால் அவர்களது மூளை, சிறுநீரகம் என்பன பாதிக்கப்படுமென வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

# சண்முகத்தின் மைத்துனர் கடத்தப்பட்டதாக புகார்!

ராஜீவ்காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் காவலில் இருக்கையில் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சண்முகத்தின் மைத்துனர் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியநாதன் எனப்படும் இவர் அரவது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாக இவரது மனைவி பொலிஸில் புகார் செய்துள்ளார்.

# குவைத் வெடி விபத்தில் தமிழர் உட்பட ஐவர் பலி!

குவைத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடி விபத்தொன்றில் நான்கு இந்தியர்களும் ஒரு பிரிட்டிஷ் பிரஜையும் கொல்லப்பட்டனர்.

வளைகுடா யுத்தத்தின் போது ஈராக் படையினர் பயன்படுத்திய பகுதி யொன்றைத் துப்பரவு செய்யும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருந்த போது அங்கிருந்த குண்டு ஒன்று வெடித்த போதே இச் சம்பவம் நிகழ்ந்தது.

கொல்லப்பட்ட இந்தியர்களில் ஒருவர் தமிழகத்தைச் சேர்ந்த தமிழர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

தெரிவுக்குழு...

மேலும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளை அரசு அப்படியே அமுல்செய்யும் எனவும் குறிப்பிட்ட காலத்தினுள் சகலரும் ஏற்கக்கூடிய தீர்வை முன்வைக்க உழைக்கும்படி தெரிவுக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதி கேட்டுள்ளார் எனவும் அமைச்சர் ரணில் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 18-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ யாழ். மாவட்டத்தில்

# 184 அகதி முகாம்களில் 12495 குடும்பங்கள் தங்கியுள்ளன

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக 184 இடம்பெயர்ந்தோர் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் முகாம்களில் 12495 குடும்பங்களைச் சேர்ந்த 56462 அங்கத்தவர்கள் உள்ளார்கள் என அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் உ. அ. அதிபர் பிரிவில் 4 முகாம்கள் உள்ளன. இம்முகாம்களில் 266 குடும்பங்களைச் சேர்ந்த 1080 பேர் தங்கியுள்ளனர். இம்முகாம்களிலுள்ளோரின் பராமரிப்புப் பணிகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் மனித முன்னேற்ற நிலையம் ஆகியன மேற்கொண்டுள்ளன.

நல்லூரில் 7 இடம்பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன. இம்முகாம்களில் 659 குடும்பங்களைச் சேர்ந்த 2685 பேர் உள்ளனர். இம்முகாம்களை அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83 பராமரிக்கின்றது.

கோப்பாய் உ. அ. அ. பிரிவில் 24 முகாம்கள் உள்ளன இவற்றில் 961 குடும்பங்களைச் சேர்ந்த 4550 பேர் உள்ளனர். இவற்றின் பராமரிப்பை றெட்பானா அமைப்பு மேற்கொண்டுள்ளது

சண்டிலிப்பாயில் 20 இடம் பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன. இவற்றில் 1757 குடும்பங்களைச் சேர்ந்த 7350 பேர் உள்ளனர் இவற்றின் பராமரிப்பை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ இ) என்பவை மேற்கொண்டுள்ளன.

உடுவில் உ. அ. அ. பிரிவில் 33 இடம் பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன இவற்றில் 1225 குடும்பங்களைச் சேர்ந்த 5112 பேர் உள்ளனர் இவற்றின் பராமரிப்பு வேலைகளை சர்வோதயம் மேற்கொண்டுள்ளது.

சங்கானை உ. அ. அ. பிரிவில் 21 இடம் பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன. இவற்றில் 1221 குடும்பங்களைச் சேர்ந்த 5044 பேர் உள்ளனர் இதனை கேரூட் (மேற்கு) அமைப்பு பராமரித்து வருகிறது.

தெல்லிப்பழை உ. அ. அ. பிரிவில் 25 இடம் பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன இவற்றில் 3509 குடும்பங்களைச் சேர்ந்த 15700 பேர் உள்ளனர் இவற்றின் பராமரிப்பை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது

கரவெட்டி உ. அ. அ. பிரிவில் 04 முகாம்கள் உள்ளன 171 குடும்பங்களைச் சேர்ந்த 739 பேர் உள்ளனர். இதன் பராமரிப்பை மெதடிஸ்த தேவாலயம், தமிழர் புனர் வாழ்வுக் கழகம் என்பனை மேற்கொண்டுள்ளன.

சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் 11 முகாம்கள் உள்ளன. 1051 குடும்பங்களைச் சேர்ந்த 7072 பேர் உள்ளனர் இவற்றின் பராமரிப்பை அறவழிப் போராட்டக் குழு மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை உ. அ. அ. பிரிவில் 15 முகாம்களில் 675 குடும்பங்களைச் சேர்ந்த 2994 பேர் உள்ளனர். இவைகளின் பராமரிப்பை கேரூட் (கிழக்கு) அமைப்பு மேற்கொண்டுள்ளது.

மருதங்கேணி உ. அ. அ. பிரிவில் 20 முகாம்களில் 1000 குடும்பங்களைச் சேர்ந்த 4136 பேர் உள்ளனர் இவற்றின் பராமரிப்பை சிறுவர் பாதுகாப்பு நிதியம், தென்னிந்திய திருச்சபை, தமிழர் புனர் வாழ்வுக்கழகம் என்பன மேற்கொண்டுள்ளன. (15)

# வலி. வடக்கு இராணுவ நடவடிக்கை; பண்டத்தரிப்புக் கோட்டம் பாதிப்பு

வலிகாமப்பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் பண்டத்தரிப்புக் கோட்டப்பகுதிப் பாடசாலைகளில் 70வீதமானவை நேரடியாகவும் 30 வீதம் மறைமுகமாகவும் பாதிப்படைந்துள்ளன.

பத்துக் கொத்தணிகளை அடக்கியுள்ள இக்கோட்டத்தில் ஏழு கொத்தணிகள் முற்றுமுழுதாகவே இடம் பெயர்ந்துள்ளன. ஏனைய மூன்று கொத்தணிப் பாடசாலைகளில் அகதிகள் தங்கியிருக்கின்றனர்

ஆரம்பத்தில் காங்கேசன்துறைக் கொத்தணியும், பின்பு காரைநகர்க் கொத்தணியும் முழுமையாக இடம்பெயர்ந்து இன்று பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சுளிபுரம் கொத்தணிகள் தவிர்ந்த ஏனைய சகல கொத்தணிகளின் பாடசாலைகளும் இடம்பெயர்ந்துள்ளன

இதனால் ஏறத்தாழ நாற்பதினாயிரம் மாணவர்கள் தமது கல்வியினைத் தொடர முடியாது பாதிப்படைந்துள்ளனர் 20

# பாட்டாளி மக்கள் கட்சியினர் நேற்றும் ஆர்ப்பாட்டம்

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்றும் அக்கட்சியின் தொண்டர்கள் பஸ்களுக்கு கல்லெறிந்தும் தீவைத்தும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விவசாயிகளுக்கு ஆதரவாக தூக்குக் கயிறு ஆர்ப்பாட்டம் நடத்திய போது ராமதாஸ் கைது செய்யப்பட்டு 15 நாள் காவலில் வேலூர் சிறையில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

## அதிபர்களுக்கான கூட்டம்

இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களையும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கூடுமாறு கோட்டக் கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு சி. வே. மகேசவேலு வேண்டியுள்ளார் 20

# 20 மைல் தூரம் நடந்த யாழ். தபாலக ஊழியர்கள்

பருத்தித்துறைக்கு தபால் பொதிகளை கப்பலில் அனுப்புவதற்கு செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் எடுத்துச் சென்ற யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் நடந்து வந்தனர்.

இவர்கள் பருத்தித்துறையில் தபால் பொதிகளை ஒப்படைத்தபின்னர் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி வருவதும் வழமை என தபால் ஊழியர்கள் தெரிவித்தனர் 06

## விசேட கூட்டம்

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மமவி சிரேஷ்ட பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம் நாளை 19 ஆம் திகதி வெள்ளி பகல் 1 மணிக்கு யாழ் புதிய விஞ்ஞானக்கழக மண்டபத்தில் (எழிலகம் முன்பாக) நடைபெறும்

உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு தலைவர் அறிவித்துள்ளார் 06

# திருகோணமலையில் பௌத்த சின்னங்கள் அழிப்பு

திருகோணமலை நூதன சாலையில் உள்ள பௌத்த புராதன சின்னங்களை வடக்கு கிழக்கு மாகாணசபை செயலக அலுவலகத்துக்காக அழிக்கப்பட்டதாக பௌத்த குருமார் வடகிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரத்தினாவிடம் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நூதனசாலையை வடக்கு கிழக்கு மாகாண சபைச் செயலகத்துக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது

---

அவ்ரோ...

இதேபோல சுன்னாகம் பகுதியையும் அது வட்டமிட்டுச் சென்றது (20, 15 47)

---

வலி வடக்கு...

தொடர்ந்து இலவச நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## வாகரை முகாமில் அதிக இராணுவம்

மட்டக்களப்பு வாகரை இராணுவ முகாமில் அதிகளவில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. வாகரையில் புலிகள் அடிக்கடி நடத்தும் அதிரடித் தாக்குதல்களை அடுத்தே இராணுவம் அதிகளவில் அங்கு குவிக்கப்பட்டதாம்.

## நல்லூர், நீர்வேலி உணவு அட்டைக்கு மண்ணெண்ணெய்

நேற்று நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தில் உள்ள கிளையில் உலர் உணவு அட்டைக்கு ஒரு லீற்றர் வீதமும் நீர்வேலி ப. நோ. கூ. சங்க 6/4 கிளையில் உலர் உணவு அட்டைக்கு மூன்று லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டதைக் காண முடிந்தது. 06